# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 13.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2616/F/2024</u>**

திருமதி.P.சந்திரா .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
மண்டல துணை பதிவாளர்,
(வீட்டுவசதி) அலுவலகம்,
எண்.143இ, 10வது தெரு,
நடராஜபுரம் தெற்கு காலனி,
தஞ்சாவூர்-613 007. .. பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திருமதி.P.சந்திரா அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.ப.மு.இன்பராஜர், கூட்டுறவு சார்பதிவாளர், எண்.24, 2வது தெரு, புதிய டேனியல் தாமஸ் நகர், பழைய வீட்டுவசதி வாரியம் அருகில், திருச்சி ரோடு, தஞ்சாவூர் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 30/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தனது கணவர் ஜி.பழனிவேல் நீடாமங்கலம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் SAHSG94-ல் (உறுப்பினர் எண்.7062) வீடு கட்டுவதற்கு மேற்கண்ட சங்கத்தில் கடன் பெற்றுள்ளார். தற்போது தனது கணவர் மரணம் அடைந்து விட்டதால் மேற்கண்ட கடன் தொகை தள்ளுபடி செய்யப்படுமா அல்லது கடன் தொகையை செலுத்த வேண்டுமா என்பன போன்ற சில தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 30.08.2024 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் தாமதமாக மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். அதனை பெற்ற பொதுதகவல் அலுவலர் 05.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 15.10.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 24.12.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 01.02.2025 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 05.09.2024 மற்றும் 20.11.2024 தேதியிட்ட கடிதங்களின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையது அல்ல எனக் கருதி இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரரின் மனுவினை பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் உரிய பொது அதிகார அமைப்பிற்கு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினைப் பெற்ற 5 நாட்களுக்குள் மாற்றம் செய்திருக்க வேண்டும் ஆனால் மனுதாரரின் 30.07.2024 நாளிட்ட 6(1) மனுவானது 30.08.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் காலதாமதமாக உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மனுவினை தாமதமாக மாற்றம் செய்த அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், மண்டல துணைப்பதிவாளர், (வீட்டுவசதி) அலுவலகம், எண்.143, 10வது தெரு, நடராஜபுரம் தெற்கு காலனி, தஞ்சாவூர் அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று அப்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்**

**கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2616/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
மண்டல துணை பதிவாளர்,
(வீட்டுவசதி) அலுவலகம்,
எண்.143இ, 10வது தெரு,
நடராஜபுரம் தெற்கு காலனி,
தஞ்சாவூர்-613 007.

**அப்போதைய பொதுதகவல் அலுவலர்**,
மண்டல துணை பதிவாளர்,
(வீட்டுவசதி) அலுவலகம்,
எண்.143இ, 10வது தெரு,
நடராஜபுரம் தெற்கு காலனி,
தஞ்சாவூர்-613 007.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திருமதி.பி.சந்திரா,
த/பெ. பழனிவேல்,
ஆதனூர் மற்றும் அஞ்சல்,
கோவில் வெண்ணி வழி,
நீடாமங்கலம் வட்டம்,
திருவாரூர்-614403.

Copy to file: KR/PA